பக்கங்கள் 16 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 19 சனிக்கிழமை 05.10.2024 | அதிர்வு 65

## சிலிண்டர் கூட்டணியில் சுதந்திரக் கட்சி போட்டி

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியாக காஸ் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணி தீர்மானித்துள்ளது. 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது இங்கே CLICK செய்யவும்



# சிறிதரன் - சுமந்திரன் ஓரணியில் களத்தில்!

## திருமலை - அம்பாறையில் வீட்டுச் சின்னத்தில் ஒன்றாக போட்டியிடுவதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு

(கே.வசந்தன்)

திருகோணமலை மற்றும் அம்பாறையில் தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதுடன், நானும் சிறிதரனும் யாழில் போட்டியிடுவோம். அத்துடன் எமது கட்சியில் போட்டியிட பெண்களுக்கு அழைப்பு விடுகின்றோம் என தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 05

# எங்களுடன் இணைந்து ஆட்சி அமைப்பது குறித்து தமிழரசுக் கட்சி பேச்சு நடத்தலாம்



## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தரப்புகள் எம்முடன் பேச்சு நடத்தலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க முன்வந்தால் அது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாடு என்னவாக இருக்கும் என 05



# காத்தான்குடியில் இருந்து கொழும்பு புறப்பட்ட இரு சிறுமிகளை திருகோணமலைக்குக் கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம்

## இரு நாள்கள் அடைத்துவைத்து அடவடித்தனம் பண்ணிய தனியார் பஸ் நடத்துனரும், சாரதியும் விளக்க மறியலில்!

(கனகராசா சரவணன்)

பெற்றோர்களின் தொல்லை தாங்க முடியாது கொழும்பு சென்று வாழ வேண்டும் என வீட்டை விட்டு வெளியேறிய நண்பிகளான 14 வயதுடைய இரு சிறுமிகளை, கொழும்பு ரயிலில் ஏற்றிவிடுவார்கள் எனக் கூறி திருகோணமலையில் ஹோட்டல் ஒன்றிற்கு கொண்டு சென்று, இரு நாள்களாக அடைத்து வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு, காத்தான்குடிப் பகுதியில் நள்ளிரவில் இறக்கிவிட்டுச் சென்ற தனியர் பஸ்ஸின் நடத்துனர் மற்றும் அதன் சாரதி ஆகிய இருவரையும் இன்று சனிக்கிழமை தாம் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றைச் சேர்ந்த 14 வயதுடைய இரு சிறுமிகளை அவர்களுடைய பெற்றோர் தொடர்ச்சியாக ஏசி வருவதன் காரணமாக அவர்கள் இருவரும் பெற்றோரின் தொல்லை தாங்க முடியாது வீட்டை விட்டு கொழும்புப் பகுதிக்குச் சென்று தங்கி வழவேண்டும் எனத் திட்டமிட்டுள்ளனர்.

இதனையடுத்து சிறுமிகள் இருவரும் கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை காலையில் பாடசாலை செல்கிறார்கள் எனக் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறி பாடசாலைக்கு செல்லாமல் அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பஸ் ஒன்றின் மூலம் நகருக்குச் சென்று, அந்தப் பகுதியிலுள்ள ஓர் இடத்தில் தமது பாடசாலை உடைகளை மாற்றிவிட்டு, பஸ்தரிப்பு நிலையத்தில் கொழும்பு செல்வதற்காகக் காத்திருந்திருக்கின்றனர்.

அப்போது அக்கரைப்பற்றில் இருந்து திருகோணமலை நோக்கி பிரயாணித்த தனியார் பஸ் மட்டக்களப்பு பிரதான பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்தது. அந்த பஸ்ஸில் ஓட்டுமாவடி சென்று அங்கிருந்து கொழும்பிற்கு செல்ல முடியும் என இரு சிறுமிகளும் திருகோணமலை பஸ்ஸில் ஏறி, ஓட்டுமாவடி செல்வதற்காக பணத்தை வழங்கி, ரிக்கட் பெற்றுக் கொண்டனர்.

இந்த பஸ் வாகரைப் பிரதேசத்தைச் சென்றடைந்த நிலையில் நித்திரையில் இருந்த இரு சிறுமிகளிடம் நடத்துனர் சென்று ஓட்டுமாவடிக்கு ரிக்கட் எடுத்துவிட்டு இறங்காமல் இருந்துள்ளீர்கள், தற்போது வாகரைக்கு வந்துள்ளீர்கள் எனச் சுட்டுக்காட்டியபோது தாங்கள் கொழும்பு செல்ல வந்துள்ளனர் என அவர்கள் தெரிவித்தனராம். நடத்துனரும்சாரதியும்திருகோணமலை சென்று அங்கிருந்து ரயிலில் கொழும்பு செல்ல முடியும், நான் ரயிலில் ஏற்றி விடுவேன் எனத் தெரிவித்து அவர்களை திருகோணமலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

திருகோணமலையை சென்றடைந்ததும் இரு சிறுமிகளை ரயில் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, ரயிலும் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டது, இனி கொழும்புக்கு பஸ் இல்லை, காலையில்தான், எனவே அதுவரைக்கும் இருவரையும் அறை ஒன்றில் தங்கவைத்து அனுப்புவார் எனத் தெரிவித்து இருவருக்கும் ஹோட்டலில் இரு அறைகளை எடுத்து அந்த சிறுமிகளுடன் நடத்துனரும் சாரதியும் தங்கியிருந்து, அவர்களை இரு தினங்கள் வைத்துப் பாலியல் துஷ்பிரயோம் மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து இரு சிறுமிகளையும் திருகோணமலையில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு காத்தான்குடியில் கொண்டுவந்து விட்டுவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். சிறுமிகள் என்ன செய்வது என தெரியாது வீடுகளுக்குத் திரும்பிசென்று தமக்கு ஏற்பட்ட பரிதாப நிலையை தெரிவித்துள்ளனர் என்பது பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனை தொடர்ந்து திருகோணமலை மற்றும் கல்முனை, நாற்பட்டிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 35, மற்றும் 27 வயதுடைய நடத்துனர், சாரதி ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்தமையுடன் இந்த பாலியல் துஷ்பிரயோகத்துக்குப் பயன்படுத்திய தனியார் பஸ்ஸையும் மீட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இரு சிறுமிகளையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



# வேட்புமனுக்களில் முன்னணியினர் கையெழுத்து

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்கள் முன்னணியின் தலைவர் முன்பாக இன்று வேட்புமனுக்களில் கையெழுத்திட்டனர்.









# மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கவே கூடாது!

## இப்படிக் கூறுகின்றார் உதய கம்மன்பில

"நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமென்பது தீப் பொறியாகும். அது நாட்டையும், அரசையும் அழித்துவிடும். எனவே, தேசிய மக்கள் சக்திக்கு அந்தப் பலத்தை வழங்கக்கூடாது."

– இவ்வாறு பிவிருது ஹெல உறுமய வின் தலைவரான முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு குறுகிய காலப்பகுதிக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் அதில் ஜனாதிபதித் தேர்தலில் வென்ற தரப்பே நிச்சயம் வெற்றி பெறும். அதேபோல் ஜனாதிபதித் தேர்தலில் வென்ற தரப்புக்கு வாக்கு வங்கியும் அதிகரிக்கும். சிலவேளை குறைந்தால்கூட அது 5 சதவீதமாகவே இருக்கும்.

மறுபுறத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற பிரதான எதிர்க்கட்சியின் வாக்கு வங்கி சரியும். குறைந்தபட்சம் 25 வீதத்தால் வாக்கு குறையும். அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியால் 113 ஆசனங்களை இலகுவில் பெற முடியும்.

இவ்வாறு சாதாரண பெரும்பான்மைப் பலத்தை வழங்கினாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கக்கூடாது.

இவ்வாறு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தால் அரசும், நாடும் அழியும் என்பதை அறியாத தரப்பே மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றன.

1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. ஆனால், அடுத்த தேர்தலில் 8 ஆசனங்கள் என்ற நிலைக்கு சுதந்திரக் கட்சி தள்ளப்பட்டது. அதுமட்டுமல்ல 17 வருடங்கள் ஆட்சியை இழந்து தவிக்க நேரிட்டது.

1977 இல் ஐ.தே.கவுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைக்கப்பெற்றது. அதன்பின்னர் இதுவரை மக்கள் வாக்குகளால் ஐ.தே.கவால் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய முடியாமல் உள்ளது.

மஹிந்தவுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தது. அவரையும் மக்கள் விரட்டினர். கோட்டாவுக்கும் அந்தப் பலம் கிடைத்தது. அவரையும் மக்கள் அடித்துவிரட்டினர். எனவே, எந்தத் தரப்புக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கக் கூடாது." – என்றார்.

# உயிரிழந்த மகனின் பரீட்சை பெறுபேறுகளைப் பார்த்து

## மாரடைப்பால் தந்தை சாவு!

உயிரிழந்த மகனின் பரீட்சை பெறுபேற்றைப் பார்த்து தந்தை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு பாடசாலையில் கல்வி கற்ற மாணவன் ஒருவன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதி இரண்டு நாட்களின் பின் உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்குக்குச் சென்று கொண்டிருந்தபோது காரில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வாரம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்த நிலையில், உயிரிழந்த மாணவனின் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்த தந்தைக்கு மகன் பரீட்சையில் சித்தியடைந்தும் உயிரோடு இல்லை என்ற அதிர்ச்சியில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் நீர்கொழும்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார் என்று நீர்கொழும்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அனைத்துலகத் தமிழியல் 5 ஆவது ஆய்வு மாநாடு!

## இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்; இலக்கியத்தினூடான மானுட விடுதலை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வு வரிசையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கச் சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தனது ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை அதன் பொன்விழா ஆண்டில் ‘இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை’ என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கிறது.

மானுட விடுதலை தொடர்பில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பினை பல்வேறு நோக்கு நிலைகளில் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதுமே அதன் நோக்கங்களாகும்.

தமிழியல் ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் நாளை மறுதினம் 07 ஆம் திகதி காலை 09 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. எட்டாம் திகதியும் இடம்பெறும்.

### ஆய்வுக் கட்டுரைகள்

இந்த மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் முதலானோரிடமிருந்து கோரப்பட்டிருந்தன. ஆர்வத்துடன் பலர் இம்மாநாட்டுக்கான கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர்.

இந்தியா, டென்மார்க் முதலான நாடுகளிலிருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. கிடைக்கப்பெற்ற 48 ஆய்வுக் கட்டுரைகளும் உரிய முறைப்படுத்தலூடாகத் துறைசார் நிபுணத்துவம் உடையவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. அவற்றுள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 38 ஆய்வுக கட்டுரைகள் மட்டும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகள் பேரா சிரியர் சு. வித்தியானந்தன் அரங்கு, இலங்கையர்கோன் அரங்கு, மஹாகவி அரங்கு, டானியல் அரங்கு என நான்கு அரங்குகளில் அளிக்கை செய்யப்பட வுள்ளன.

### மூத்த படைப்பாளுமைகளுக்கு கௌரவம்

ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் பல்வேறு புலங்களில் கோலோச்சி வருகின்ற புலமையாளர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் இந்த மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

உயராளுமைக்கான கௌரவத்தைப் பேராயர் வண கலாநிதி எஸ். ஜெபநேசனுளும், படைப்பாளுமைக்கான கௌரவத்தை மூத்த மரபுக் கவிஞர் சோ.பத்மநாதனும் மூத்த எழுத்தாளருக்கான கௌரவங்களை குந்தவை (இரா. சடாச்சரதேவி), அ. யேசுராசா மற்றும் ஐ. சாந்தன் ஆகியோரும் பெறவுள்ளனர்.

தமிழ்மொழியை மீதான ஈடுபாட்டையும் இலக்கியப் பரிச்சயத்தையும் பரவலடையச் செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் உள்ளிட்ட பிற பீட மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையையும், வடக்கு மாகாணத்தின் பன்னிரண்டு வலயங்களிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, தமிழறிவுப் போட்டிகளையும் இந்த மாநாட்டின் இணை நிகழ்வுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### முப்பெரும் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் அப்பீடத்தின் ஓர் அங்கமாகிய தமிழ்த் துறையும் தமது ஐம்பதாவது ஆண்டுகளை நடப்பாண்டில் நிறைவுசெய்துள்ளன.

அவ்வகையில் இவற்றின் பொன்விழாக் கொண்டாட்ட வரிசையில், இரண்டாம் நாள் நிகழ்வை ‘முப்பெரும் விழா’ என்ற தலைப்பில் கவிதா நிகழ்வு, நடன அரங்கு, தமிழிசை அரங்கு, கூத்து அரங்கு என்றவாறாக ஒழுங்கமைத்துள்ளோம்.

இப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர். சு. வித்தியானந்தன் ஈழத்தின் பாரம்பரியக் கூத்துக்களை மீட்டுருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை உடையவராக விளங்கினார். அவரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வழங்கி வருகின்ற ஈழத்தின் தென்மோடிக்கூத்தின் செழுமையை வெளிக்கொணரும் வகையில் ‘காத்தவராயன் கூத்து’ இம்முறை இங்கு மீளவும் மேடையேற்றப்படுகின்றமை சிறப்புக்குரியது ஆகும்.

### புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இந்த மாநாட்டை முன்னிட்டுத் தமிழியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் பயனுறும் வகையில் பிரபல பதிப்பகங்களின் புத்தகக் கண்காட்சிக்கும் புத்தக விற்பனைக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கணிசமான விலைக்கழிவில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெளிவரும் நூல்களை இந்தக் காலப் பகுதியில் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

இந்த மாநாட்டுக்கான முழுமையான நிதிப்பங்களிப்பை வழமை போன்று ‘சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக்கொடை நிதியம்’ வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## சிறிதரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இன்று இடம்பெற்றது. இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மத்திய குழுவால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் தெரிவுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. 11 பேர் அதில் கலந்து கொண்டோம். இதன்போது, வேட்பாளர் நியமனம் தொடர்பாக மாவட்ட ரீதியாக கலந்துரையாடினோம். எந்தவொரு மாவட்டத்தினதும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. அதனால் தெரிவிக்குழுக் கூட்டம் தொடர்ந்தும் நாளையும் இடம்பெறும். அதன் பின்னரே முடிவு வெளியிடப்படும்.

விசேடமாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது. அந்த மாவட்டங்களில் ஒவ்வொரு தமிழ் பிரதிநித்துவமே வரக்கூடிய நிலைமை இருக்கிறது. கடந்த முறை அம்பாறை மாவட்டத்தில் நாம் தமிழ் பிரதிநித்துவத்தை இழக்க நேரிட்டது. பல கட்சிகளும் போட்டியிட்டால் திருகோணமலையிலும் இம்முறை அதுவே நிகழும். இதனால் அந்த இரு மாவட்டங்களில் தமிழ் பிரதிதிநித்துவத்தை தக்க வைப்பதற்காக ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

விசேடமாக திருகோணமலை மாவட்டத்தில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக திருகோணமலை ஆயர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். அவருடன் இன்று மாலை 4.30 இற்கு சந்திப்பு ஒன்று உள்ளது. அவரை சந்தித்துப் பேச ஒரு குழு திருகோணமலை செல்கின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் வீட்டுச் சின்னத்திலும் ஏனைய கட்சி வேட்பாளர்களையும் இணைத்து போட்டியிட முடியும். இது தொடர்பாக அவதானம் செலுத்தி வருகின்றோம்.

அடுத்து, இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். இளையவர்கள், புதியவர்களை விரும்புகிறார்கள். எமக்கு கிடைத்த வேட்பாளர் பட்டியல்களில் பெண்களின் பெயர் குறைவாக உள்ளது. எமக்கு ஆர்வமுள்ள, திறமையான, செயற்பாட்டுத் திறன் கொண்ட, எம்மோடு இணைந்து பயணிக்கக் கூடிய பெண்கள் தேவையாகவுள்ளனர். நாம் அவர்களுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்கத் தயாரகவுள்ள போதும் பெண்கள் பலரும் முன்வரவில்லை. பெண்கள் அமைப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் வழ்குவதில்லை என மத்திய குழு எடுத்த தீர்மானத்தை எமது தெரிவுக் குழுவும் உறுதி செய்துள்ளது. எனவே அவர்களைத்தவிர்த்து புதிய வேட்பாளர்களையும், இளைஞர்களையும் களமிறக்கவுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் மத்திய குழு எடுத்த தீர்மானத்தை மீறி சிறிதரன் மற்றும் சிறிநேசன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர். அதில் ஏற்கனவே போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை என தீர்மானம் எடுக்கப்பட்டதால் சிறிநேசன் போட்டியிட முடியாது. சிறிதரன் மத்திய குழுக் கூட்ட தீர்மானத்தை மீறி செயற்பட்டதால் அவரை போட்டியிட அனுமதிக்கக் கூடாது அல்லது அவராக விலகியிருக்க வேண்டும் என நான் கோரினேன். இதை மறுத்து தானும் போட்டியிடப் போகிறார் என சிறிதரன் தெரிவித்தார். இந்நிலையில் தெரிவுக் குழுவும் நாங்கள் இருவரும் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அதற்கு அமைவாக நானும், சிறிதரனும் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவோம். நிச்சயமாக வெல்வோம். ஏனைய 7 பேரையும் இளைஞர்களாக களமிறக்குவோம் எனத் தெரிவித்தார்.

---

## சிலிண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவும், அரசியல் உயர்பீடமும் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடியது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போதும் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கே நிமல் சிறிபாலடி சில்வா அணி ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## எங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிந்த லால்காந்த கூறியவை வருமாறு:–

“அவர்கள் (தமிழரசுக் கட்சியினர்) எம்முடன் கலந்துரையாடும் விடயங்கள் எவை என்பது பற்றி பரிசீலிக்க வேண்டும். அவற்றுக்கு நாம் இணங்குகின்றோமா அல்லது இல்லையா என்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எவர் வேண்டுமானாலும் எம்முடன் பேச்சு நடத்தலாம். ஆனால், அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எவை, மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அவை தடையாக உள்ளனவா, எமது கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பன உள்ளிட்ட விடயங்கள் ஆராய்ந்த பின்னரே அது தொடர்பில் முடிவெடுக்கப்படும்.” – என்றார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# தப்பிப் பிழைக்குமா 13?

இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது, அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த உதவும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேரில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஒரு நாள் விஜயமாக இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

"இலங்கையின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைப் பேணும் அதேவேளை, தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம் - நீதி - கௌரவம் - சமாதானம் ஆகியவற்றுக்கான அபிலாஷைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நோக்கத்தை அடைய மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது உதவும்." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறான 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தையும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையையும் முழுமையாக நடைமுறைப்படுத்த செய்வதில் இந்தியா தொடர்ந்து தீர்க்கமாக இருக்கின்றது என்பதையே இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பு கோடிகட்டி நிற்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான மாகாண சபை முறைமை, காலத்துக்கு காலம் அது தொடர்பில் செய்யப்பட்ட சட்ட திருத்தங்களின் மூலம் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு' மாறி இருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட பெருமளவு அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப் பிடுங்கப்பட்டு விட்ட நிலையில் இப்போது எலும்புக்கூடு போல எஞ்சி இருக்கின்றது மாகாண சபைக் கட்டமைப்பு.

அந்தக் கட்டமைப்புக்குக் கூட தேர்தல் நடத்தாமல் ஆண்டு கணக்கில் இழுத்தடிக்கும் போக்கை முன்னைய அரசுகள் பின்பற்றி வந்த நிலையில், இந்த மாகாண சபை முறைமைகள் தொடர்பில் சில விடயங்களை வெளிப்படுத்தி, அவற்றை தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு, வெற்றியீட்டி அதிகாரத்துக்கு வந்திருக்கிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

13ஆம் திருத்தத்தை அரமைப்பில் உள்ளபடி நடைமுறைப்படுத்துவோம், அதன் கீழான மாகாண சபை தேர்தலை இயன்ற விரைவில் நடத்துவோம் - என்ற இரண்டு வாக்குறுதிகளையும் அவர் தந்திருந்தார். அவற்றை அவர் நிறைவேற்றக் கூடும்.

ஆயினும், அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அவருடைய இலக்கு வேறானது என்பது தெளிவானது.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அதிகாரத்தில் இருந்த நல்லாட்சி அரசு அப்போது உருவாக்க முற்பட்டு, இடையில் தடைப்பட்டுப் போன புதிய அரசமைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்து, நிறைவு செய்வது என்பது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி ஆகும்.

அது நடைமுறைக்கு வரும்போது இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதன் கீழான 13 ஆவது திருத்தமும், அதன் பெறுபேறான மாகாண சபை முறைமையும் அடிபட்டு போவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.





# மாவடிப்பள்ளியில் பொருளாதார ரீதியாக பின் தங்கிய குடும்பங்களுக்கு காசோலை!

( எம். என்.எம்.அப்ராஸ் )

மாவடிப்பள்ளி கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் பொருளாதார ரீதியாக பின் தங்கிய பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் சுய தொழில் புரிகின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

மாவடிப்பள்ளி மொழி அபிவிருத்தி மற்றும் சக வாழ்வு சங்கத்தினர் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க 16 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியாக காசோலை மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தயோகத்தர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான அம்பாறை மாவட்ட வலையமைப்பு நிறுவனமான பெண்கள் வலையமைப்பானது சமூக, சக வாழ்வு நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவித் திட்டத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது மாவடிப்பள்ளி மொழி அபிவிருத்தி மற்றும் சக வாழ்வு சங்கத்தின் தலைவர் இசட்.எம். நஸ்கான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி டி.வாணி, விஷேட அதிதியாக எச்.டி.ஓ. நிறுவனத்தின் இணைப்பாளர் எம்.ஐ. ரியால், கிராம உத்தியோகத்தர் ஏ.எம். அலியார், மாவடிப்பள்ளி கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எச்.ஹினாயா, ஆர்.தன்சிலா, மாவடிப்பள்ளி மேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். சகீனா, அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் எஸ்.அனிதா, சகவாழ்வு சங்க செயலாளர் ஏ.அஷ்ரப் மற்றும் பயனாளர்கள் கலந்து கொண்டனர்.






# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிறு முயற்சியாளர்களின் சந்தை

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு காலாண்டுக்கான சிறிய சந்தை நிகழ்வானது பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஷாபிர் கலந்து கொண்டு பொருள்களைப் பார்வையிட்டதுடன் கொள்வனவும் செய்தார்.

இந்த நிகழ்வில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு இரத்ததான முகாம்

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு பெரண்டினா களுவாஞ்சிக்குடி கிளை மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையும் இணைந்து ‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’ எனும் தொனிப் பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

திடீர் விபத்துக்கள், சத்திர சிகிச்சைகளுக்கான அவரச தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் என்பதற்கமைவாக பெரண்டினா களுவாஞ்சிக்குடி கிளையில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது. அதிகளவான இரத்ததான கொடையாளிகள் கலந்துகொண்டிருந்தனர்.



இதன்போது பெரண்டினா பிரதேச முகாமையாளர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்கள், பெரண்டினா ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் சமூகத்துக்காகக் குரல் கொடுத்தவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே!

## முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவிடம் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளராகவும், மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப் நியமனக் கடிதத்தைப் பெற்றுள்ளார்.

இந்த நியமனம் நேற்று (04) உத்தியோக பூர்வமாக கொழும்பு 07 இல் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை தூக்கி எறிந்து விட்டு ரணிலுடன் கைகோர்த்துள்ளார். அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவத்தையும் இதன் போது ரணிலிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகவும் சிலிண்டர் சின்னத்திலும் ரணில் கூட்டணியில் போட்டியிடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதத்தைப் பெற்ற பின் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

சிறந்ததொரு தலைவனுக்கான உதாரணமாக ரணில் விக்ரமசிங்க விளங்குகிறார். முஸ்லிம் சமூகத்துக்காகக் குரல் கொடுத்தவர் இவரே. ரிசாட் பதியுதீன் சிறையில் அடைக்கப்பட்ட போதும் கூட நாடாளுமன்றில் குரல் கொடுத்தவர். எனவேதான் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ரிசாட், ஹக்கீம் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருக்கும் போது தனித்து போட்டியிட வேண்டும் என தெரிவித்த போது ரிசாட் மறுத்தார். இதனால் வெளியேறி ரணிலுடன் இணைந்தேன்.

சஜீத் பிரேமதாசாவால் ஆட்சிக்கு வர முடியாது. ஏன் என்றால் 2019 இல் போட்டியின் போது ஐக்கிய தேசிய கட்சியின் ரணிலின் வாக்கும் அங்கு இருந்தது. மூன்று தேர்தல்களில் இரு ஜனாதிபதி பொதுத் தேர்தலிலும் ஒரு பொதுத் தேர்தலிலும் தோல்வி கண்ட சஜீத்துடன் இணைந்து ரிசாட், ஹக்கீம் சிறுபான்மையை எப்படி பாதுகாப்பது. ஏமாற்றுகிறார்கள். பெரும்பான்மை ஆசனத்தை இம் முறை 113 ஐ இந்த அரசாங்கத்தால் பெற முடியாது. எனவே தான் அநுர குமாரவுடன் இணைந்து எதிர்காலத்தில் தேசிய அரசாங்கம் ஊடாக ஆட்சி அமைந்தால் ரணில் விக்ரமசிங்கவே பிரதமராகலாம்.- என்றார்.





# கிழக்குப் பல்கலை புத்தாக்கப் போட்டியில் காத்தான்குடி மத்தி மாணவனுக்குத் தங்கம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட டெக்னோ பாக புத்தாக்கப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இலங்கை கிழக்கு பல்கலைக் கழகத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான புத்தாக்க மற்றும் ரோபோடிக்ஸ் கண்காட்சி போட்டியானது அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக டெக்னோபாக் வளாகத்தில் இடம் பெற்றது.

போட்டி நிகழ்வில் கலந்து கொண்ட காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்களில் தரம் 10 ,11 பிரிவில் கல்வி பயிலும் மாணவன் எம்.எப். எம்.ஹக்காம் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

கலந்து கொண்ட ஏனைய மாணவர்கள் பங்கு பற்றிய மைக்கான சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.



# நுரைச்சோலை மாணவனுக்கு அகில இலங்கை ரீதியில் தங்கம்!

(புத்தளம் எம்.யூ.எம்.சனூன், கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கண்டி திகன உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு மத்தியிலான மல்யுத்த விளையாட்டுப் போட்டியில் நுரைச்சோலையைச் சேர்ந்த நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகம்மது சியாம் முகம்மது அர்கம் 71 கிலோ எடைப் பிரிவில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இந்த மாணவன் தனது பாடசாலைக்கும் தனது நுரைச்சோலை நகருக்கும் பெருமையை பெற்றுக் கொடுத்துள்ளார்.

நுரைச்சோச்சோலை பாடசாலை வரலாற்றில் விளையாட்டுத்துறையில் ஏலவே தங்கப் பதக்கம் ஒன்றைத் தனதாக்கி "தங்க மகன்" என்ற பெருமையை பெற்ற இந்த மாணவன் மிகக்குறுகிய காலத்தில் இரண்டாவது தங்கப் பதக்கத்தை வென்று "தங்க மகன்" என்ற பெயரைத் தக்க வைத்துள்ளார்.

இவர் கடந்த 2023 இல் நடைபெற்ற போட்டியில் மூன்றாமிடம் பெற்று வெண்கலப்பதக்கத்தையும், கடந்த மாதம் இடம்பெற்ற போட்டியின் போது முதலாமிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் இந்தத் துறையில் சர்வதேச மட்டத்தில் மேலும் சிறப்பிக்க பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இம்ரான்கான், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.



# முன்னாள் எம்.பி. சாள்ஸ் நிர்மலநாதன் மீண்டும் தேர்தலில் களம் இறங்குகிறார்!

**(வாஸ் கூஞ்ஞ)**

இந்த முறை நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது இளம் சமூகத்துக்காக விட்டுக் கொடுக்கும் நிலைமை இருந்த போதும், கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்கவும் மன்னார் தமிழரசுக் கட்சி கிளையின் வேண்கோளுக்கு இணங்கவும் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆலோசித்துள் ளார் என்று வன்னி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்ம லநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் இருந்து தமிழரசுக் கட்சியின் சார்பில் தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு சம்பந்தமாகவும் இக்கட்சியின் தேர்தலுக்கான நிதிபற்றியுமான கலந்துரையாடல் தமிழரசுக் கட்சி சார்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை (04) மன்னார் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் இருந்து மூன்று நபர்களின் பெயர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் மன்னாரில் பிரபலயமான இளம் சட்டத்தரணி செ.டினேசன் ஆகியோர் முன்மொழியப்பட்டு தேர்தலில் களம் இறங்க இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தொடர்ந்து போட்டியிட வேண்டும் என்று தமிழரசுக் கட்சி மன்னார் கிளை ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தது எனினும் இளம் சமூகத்துக்காகத் தான் இம்முறை தேர்தலில் நிற்க மாட்டேன் என தெரிவித்திருந்தார்.

இருந்தும் கட்சி மற்றும் தொண்டர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இம்முறையும் தான் தேர்தலில் களம் இறங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக சாள்ஸ் நிர்மலநாதன் நமது நிருபரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

# உணவகத்தில் குழப்பம் விளைவித்த பொலிஸ் பரிசோதகருக்கு இடமாற்றம்

**(ஆ.ரமேஸ்)**

நுவரெலியா நகரில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரால் நடடத்தப்படும் உணவகம் ஒன்றுக்கு சிவில் உடையில் சென்று குழப்பத்தில் ஈடுப்பட்டதாகத் தெரிவிக்கும் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் கண்டி கிழக்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் பணியாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நுவரெலியா நகரில் உள்ள முஸ்லிம் பெரிய பள்ளிக்கு அருகில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரால் அரபிக் உணவு வகைகள் உள்ளடங்கிய உணவகம் நடத்தி செல்லப்படுகிறது.

இந்த உணவகத்துக்கு உணவு பெற்றுக்கொள்ள கடந்த (03) ஆம் திகதி அந்தப் பொலிஸ் பரிசோதகர் சென்றுள்ளார்.

இதன் போது உணவகத்தில் வைக்கப்பட்டிருந்த இடியப்பம், பரோட்டா மற்றும் கறிகள் போன்ற உணவுகள் குளிராகவும் உண்ணமுடியாத தன்மையிலும் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மனிதன் உண்ண முடியாத நிலையில் உணவுகளை விற்பனை செய்வதாகவும் உணவுகளின் விலை அதிகம் எனவும் வர்த்தகருடன் பொலிஸ் பரிசோதகர் முண்பட்டுள்ளார்.

அத்துடன் இந்தப் பொலிஸ் பரிசோதகர், வர்த்தகரையும் உணவக பணியாளர்களையும் தாக்கியும் உள்ளார் என்றும் அதேசமயம் குளிரான உணவுகளை வர்த்தகரைப் பலாத்காரமாக உண்ணவும் செய்துள்ளார் என்றும் றிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உணவகத்தின் உணவுகள் பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும்,பொது சுகாதார பரிசோதக அதிகாரிகளை வரவழைத்து நடவடிக்கை எடுப்பதாகவும் மிரட்டி எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இந்த பொலிஸ் பரிசோதகர் நடந்து கொண்ட விதங்கள் அங்குள்ள சீசீடிவி கமராவில் பதியப்பட்டுள்ளன. இதனை ஆதாரமாக கொண்டு உணவக வர்த்தகர் தனக்கு நேர்ந்ததை நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற விசாரணையை அடுத்து பொலிஸ் பரிசோதகர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







### ஐ.நா.மனித உரிமைகளுக்கான ஜெனிவா தொடர் கூட்டம்!

# தமிழ் மக்களின் ஏக்கம் அரசுக்குக் கலக்கம் ?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தொடர் கூட்டம் தற்போது ஜெனீவா நகரில் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் குறித்த ஆய்வும் கலந்துரை யாடல் களும் இடம்பெற்று வருவதோடு இலங்கை தொடர்பான ஒரு பிரகடனம்மும் நிறைவேற்றப்பட உள்ளது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரி விக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்றுள்ள அரசு, ஜனாதிபதி மாற்றம் இந்த பிரகடனம் மீது எந்த வகையான தாக் கத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புகளும் தற்போது அனைத்து தரப்பாலும் கூர்ந்து அவதானிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பின்னணியில் குறிப்பிடத்தக்க அறிக்கையாக இலங்கையில் இடம் பெற்றுவரும் மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தப்பட்ட பூரண அறிக்கையின் முதல் எழுத்து வடிவ அறிக்கையொன்று (முற்கூட்டிய அறிக்கை – Advance Report) கடந்த ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

இதன் முக்கிய நோக்கம் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் அங்கத்தவர்களின் கவனத்தைப் பெற்றுத் தொடர் கூட்டத்தில் இலங்கை மனித உரிமைகள் மீதான ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்குவதே. இதன் அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமைகள் பற்றிய விவரக் கேவை ஒன்று இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

**OHCHR இன் பரிந்துரைகள்**

இந்த முற்கூட்டிய அறிக்கை (Advance Report) முழு வதுமாக முன்னைய உறுதிமொழிகள் இலங்கையால் அமுல்படுத்தப்படாமையை ஆவணப்படுத்தி இருப்ப தோடு மனித உரிமை மீறல்களுக்கு உறுதியான தண்ட னையின்மை மீது நடவடிக்கை எடுக்க இலங்கை வெளிப்படையாக வேண்டுமென்றே மறுப்பதையும் வெளிப்படுத்துகிறது.

அறிக்கையில் பின்வரும் காரணங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

01. பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை குறிப்பாக அங்கீகரிக்கத் தவறியமை.

02. மனித உரிமை மீறல்களில் இராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படைகளின் பங்கை ஒப்புக்கொள்வது.

03. அத்துடன் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள், சட்டத்தின் ஆட்சிக்கும், ஜனநாயகத்துக்கும், நல்லாட்சிக்கும் முக்கிய தடையாக உள்ளதை வெளிப்படுத்த வேண்டும்.

04. பாரதூரமான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட அரச இயந்திரத்தின் பல கட்டமைப்புகள் மற்றும் பல அரச உறுப்பினர்களும், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை மீறல்களை நிலைநிறுத்துவதில் அர்த்த



முள்ள முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில் நடை முறையில் உள்ளனர்.

05. 51ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2022 இல் பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த மற்றும் மக்கள் போராட்டங்களைத் தூண்டியதுடன், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் வேரூன்றிய தண்டனை யின்மை வெளிப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் மீறி, மொத்த மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான இரண்டு பரிந்துரைகளின் பரிந்துரைகளை அறிக்கை தொடர்ந்து முன்வைத்துள்ளது. அதாவது ஒன்று இலங் கைக்கும் மற்றொன்று சர்வதேச சமூகத்துக்கும் ஆகும்.

01. பெரும்பான்மையான துஷ்பிரயோகங்களைச் செய்த அரசு – சர்வதேச சமூகத்துக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளையும் அவற்றின் முன்னேற்றத்தையும், நீதி வழங்க வேண்டும் என்ற இயல்பு நிலை அனு மானத்தை இலங்கை தவறாக பயன்படுத்தியுள்ளது.

02. பல ஆண்டுகளாக வழங்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த ஜூன் 2024 இல் மேலதிக ஆலோசனைகளுக் காக OHCHR/HRC குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது. மேலும் 2023 பெப்ரவரியில் இலங்கை மீதான தனது நான்காவது சுழற்சியான உலகளாவிய கால மீளாய்வை (UPR) உட்படுத்தியது.

கடந்த 15 வருடங்கள் மேலாக HHR/u;RC இலங்கை மனித உரிமைகள் ஈடுபாட்டில் உறுதியாக இருந்து வருகிறது. ஆயினும் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களின் ஆணைகள் அல்லது இலங்கையால் நடைமுறைப் படுத்தப்பட்ட எந்த ஒரு பகுதிக்கும் இது சம்பந்தமாக எந்த பயனும் இல்லை என்பது அறிந்ததே.

இந்த எழுத்துமூல அறிக்கையை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் தலை வர் மதிப்புக்கு Hon Volker Turk தனது உரையை தொடர் கூட்டத்தின் முதல் நாள் செப்ரெம்பர் ஒன் பதாம் திகதி அன்று சபையில் நிகழ்த்தினார். இதில் அவர் இலங்கை தனது பழைய மனித உரிமை மீறல் பின்னணியில் இருந்து மீண்டு புதிய பாதையொன்றில் பயணம்

தொடர்ச்சி▼






# தமிழ் மக்களின் ஏக்கம் அரசுக்குக் கலக்கம் ?

தொடர்ச்சி▲

செய்ய முயல வேண்டும் என்று வலியுறுத்தி கூறினார்.

மனித உரிமைகள் சபையின் தூதரின் இந்த வேண்டுகோளை அடுத்து மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள்லின் பரிசீலனைக்கு ஒரு பரிசாத்த பிரகடனம் ஒன்று செப்ரெம்பர் பதினாறாம் திகதி அன்று வெளியிடப்பட்டுள்ளது.

01. சர்வதேச அமைப்புகள் மற்றும் பரஸ்பர சட்ட உதவி செயன்முறைகள் மற்றும் ஒத்துழைப்பின் ஊடாக, இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகளை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும் ஒத்துழைக்கவும். உயிர் பிழைத்தவர்கள், குடும்பங்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுதல்.

02. இலங்கையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு ஏனைய சர்வதேச சட்ட விருப்பங்களைப் பயன்படுத்துவதைக் முதன்மையாக கவனித்தல்.

03. பரந்த அளவிலான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும், சர்வதேச சட்டத்திற்கு இணங்கவும், மொத்த சர்வதேச மனித உரிமை மீறல்கள் அல்லது கடுமையான மனிதாபிமான சட்ட மீறல்களைச் செய்ததாக நம்பத்தகுந்ததாகக் கூறப்படும் தனிநபர்களுக்கு எதிரான சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற மேலும் இலக்கு விதிக்கப்பட்ட தடைகளை ஆராய்தல்.

04.இலங்கைப் பிரஜைகள் தொடர்பான புகலிட நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யவும், பழிவாங்கல்களை எதிர்கொள்பவர்களைப் பாதுகாப்பதற்காகவும், சித்திரவதை அல்லது பிற கடுமையான மனித உரிமை மீறல்களின் உண்மையான ஆபத்தை முன்வைக்கும் வழக்குகளில் எந்தவிதமான மறுபரிசீலனையில் இருந்தும் தவிர்த்தல்.

05. OHCHR ஐ தொடர்ந்து கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் மற்றும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் குறித்த அதன் பலப்படுத்தப்பட்ட பணிகளுக்கு ஆதரவளித்தல்.

06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ‘மற்ற சர்வதேச சட்ட விருப்பங்களை’ ஒன்றாகப் பயன்படுத்த HRC உறுப்பு நாடுகளையும் மற்றவர்களையும் வலுவாக ஊக்குவித்தல்.

OHCHR அறிக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகிறது. மொத்த மனித உரிமை மீறல்களுக்கான சர்வதேச நீதி மன்றங்களுக்கான வழிகள் கிடைக்கவில்லை என்றால், கடந்த காலத்தில் சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன.

HRC உறுப்பு நாடு மற்றும் பிறரை OHCHR இன் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்துடன் (OSLAP) இணைந்து செயல்படுமாறு பேரவை வேண்டுகிறது.

● மேலும் OSLAP கடந்த சில வருடங்களாக ஆர்வத்துடன் சேகரித்து வரும் சான்றுகள் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி உண்மையான சட்ட வழக்குகள் மற்றும் பிற பொறுப்புக்கூறல்களை விரைவாகத் தொடர்வது.

● தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு செய்த போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் உட்பட அந்தச் சட்டங்களின் மொத்த மீறல்களுக்கு தண்டனையின்மை, சட்டத்தை புறக்கணிக்க மற்றவர்களை ஊக்குவிக்கிறது மற்றும் அதன் பொருத்தமற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது.

● சர்வதேச விதி அடிப்படையிலான ஒழுங்கை பராமரிக்க உடனடி நடவடிக்கையை இப்பேரவை அவசரமாக பரிந்துரைக்கிறது.

இந்த பரீட்சார்த்த பிரகடனம் உறுப்பு நாடுகளின் பரிசீலனைக்கு தற்போது உட்படுத்தப்பட்டு இதனுடைய இறுதி வடிவம் எதிர்வரும் ஒக்டோபர் மாத முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடும் வாய்ப்புகள் உள்ளதாகவே ஜெனிவாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொறுத்திருந்து பார்ப்போம் !

இதேவேளை, இந்தப் பிரகடனத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வண்ணம் புலம்பெயர்ந்த நாடுகளின் ஒன்பது தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கு சமர்ப்பித்து உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புலம் பெயர்ந்த அமைப்புக்களும் மற்றும் தாயகத்தில் செய்யப்படும் மனித உரிமை அமைப்புகள், மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக சந்திப்புகள் மற்றும் தாயகசூழ்நிலை, மனித உரிமை மீறல்கள் பற்றிய விளக்க கூட்டங்கள் என ஜெனிவாவில் தற்போது களம் அமைத்து செய்யப்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு. இடையறாது செய்யப்படும் தொடர் கோரிக்கைகளும் அழுத்தங்களும் இந்த மனித உரிமை பேரவையின் பிரகடனத்தில் இடம்பெற்று தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையுமா? அல்லது வெறும் கனவாகவே இந்த பிரகடனம்வும் கடந்து விடுமா ? அதையும் பொருத்திருந்தே பார்க்க வேண்டும்.

பின்வரும் புலம்பெயர் ஒன்பது தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து இக்கூட்டறிக்கையில் கோரியுள்ளன.

1. அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ். (ATC - AustralianTamil Congress)
2. வட கிழக்கு மாகாண வலிந்து காணாமல்

தொடர்ச்சி▼

# தமிழ் மக்களின் ஏக்கம் அரசுக்குக் கலக்கம் ?

தொடர்ச்சி▲

ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான சங்கம். (ARED-Association for Relatives of the Enforced Disappearances, North & East Provinces, Sri Lanka)

3. வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு. (FeTNA - Federation of Tamil Sangams of North America)

4. இலங்கைத் தமிழ்ச் சங்கம், அமெரிக்கா. ( Ilankai Tamil Sangam)

5.பிரான்ஸ் தமிழீழ அவை (Maison du Tamil Eelam, France)

6. இலங்கையில் சமத்துவம் மற்றும் நீதிக்கான மக்கள். (Pearl Action - People for Equality And Relief in Lanka)

7. ஐக்கிய தமிழ் அமெரிக்கர்கள். (PAC - Tamil Americans United)

8. ஐக்கிய அமெரிக்க தமிழ் செயல் குழு (USTAG - United States Tamil Action Group)

9. உலகத் தமிழர் அமைப்பு, அமெரிக்கா. (WTO - World Thamil Organization, USA)





### அகத்திய முனிவரால் முதலில் நிறுவப்பட்ட

# சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை பார்வையிட்டுள்ள இந்தியத் தூதர்கள்!

(அபு அலா )

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவ பீடம் மற்றும் நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, கப்பல் துறை சித்த ஆயுள்வேத தள வைத்திய சாலை ஆகியன இணைந்து நடத்திய மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாம் அகத்தியர் ஸ்தாபனமான மூதூர் கங்குவேலி திருக்கரைசை மாநகர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நேற்று (04) இடம்பெற்றது.


கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன தலைவர் தவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த இலவச சித்த மருத்துவ முகாமுக்கு இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண இணை தூதர் ஸ்ரீ சாய் முரளி மற்றும் இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண துணை தூதர் நடராஜா ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், கிழக்கு பல்கலைக்கழக முதல்வர் திருமதி சந்திரவதனி தேவதாசன், திருமலை வளாக சித்த மருத்துவ பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் வ.அனவரதன், நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன், வைத்திய கலாநிதி செ.போல்ரன் றஜீவ் உள்ளிட்ட வைத்தி யர்கள், விரிவுரையாளர்கள், பயிற்சி வைத்தியர்கள், சித்த மருத்துவ பீட மாணவர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உடல் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, உடற்பருமன் அளவு போன்ற பல பரிசோதனைகளை மேற்கொண்டனர். சித்த மருத்துவ ஆலோசனைகளுடன் மருந்துகளையும் பெற்றுச் சென்றனர்.

தொற்றாநோய் குறித்துப் பொது மக்களுக்கு தகவலளிக்கும் வகையில் அது தொடர்பான விழிப்புணர்வு காணொளியும் காட்சிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண இணைத் தூதர் ஸ்ரீ சாய் முரளி மற்றும் இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண துணைத் தூதர் நடராஜா உள்ளிட்ட குழுவினர் திருக்கரைசையம் பதி கங்குவேலி அகஸ்தியர் ஸ்பான சிவன் ஆலயத்தை வழிபட்டதன் பின்னர், சித்த மருத்துவ தந்தையான அகஸ்திய மா முனிவர் வாழ்ந்து வந்த இடங்களையும், அவரால் நிறுவப்பட்டதும் உலகிலேயே முதலாவதாக சித்த மருத்துவ பல்கலைக்கழகமாக இருக்கும் இடத்தையும் பார்வையிட்டனர்.





# மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு தேவை

## ராமதாஸ் கோரிக்கை




தமிழக மீனவருக்கு 18 மாதம் சிறை, 4 மீனவர்களுக்கு 1.60 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது இலங்கை அரசு. தமிழ்நாட்டு மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது கடந்த செப்ரெம்பர் மாதம் கைது செய்யப்பட்ட புதுக்கோட்டை மீனவர்கள் 4 பேருக்கு தலா 40 லட்சம் இலங்கை ரூபா வீதம் 1.60 கோடி ரூபா அபராதமும், ஒரு மீனவருக்கு 18 மாதங்கள் சிறை தண்டனையும் விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரங்களை முடக்கும் நோக்கத்துடன் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

பூம்புகார் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த மாதம் 21 ஆம் திகதி மீன்பிடிக்க சென்ற 37 மீனவர்களும், புதுக்கோட்டையிலிருந்து கடந்த மாதம் 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் மீன் பிடிக்கச் சென்ற 18 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் நீதிமன்றக் காவல் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் பூம்புகார் மீனவர்கள் 37 பேரும், புதுக்கோட்டை மீனவர்கள் 13 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

மீதமுள்ள புதுக்கோட்டை மீனவர்கள் 5 பேரில் ஒருவர் இரண்டாவது முறையாக எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி அவருக்கு 18 மாதங்கள் சிறை தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதேபோல், மீனவர்களுக்கு தலா 40 லட்சம் இலங்கை ரூபாய் வீதம் 1.60 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்ட நிலையில், அதை அவர்களால் செலுத்த முடியாததால் அவர்களும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் 22 பேருக்கு இலங்கை ரூபா மதிப்பில் தலா 3.5 கோடி ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம், அதை செலுத்தாத வரை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டது. அபராதத்தை செலுத்த முடியாத மீனவர்கள் இன்னும் சிறையில் வாடுகின்றனர். இராமேஸ்வரம் மீனவர்கள் மூவருக்கு தலா 1.50 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப்போல மேலும் பத்துக்கும் மேற்பட்டவர்கள் அபராதம் விதிக்கப்பட்டும், சிறை தண்டனை விதிக்கப்பட்டும் இலங்கை சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர். அபராதம் விதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்கள் ஏழ்மையில் வாடும் நிலையில், அவர்களால் அபராதத்தை செலுத்த முடியாது என்பதால் அந்த மீனவர்கள் எப்போது விடுதலை ஆவார்கள் என்பது தெரியவில்லை.

வங்கக்கடலில் மீன்பிடித்ததாக கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை 6 மாதங்கள், ஓராண்டு என சிறையில் அடைத்து வந்த இலங்கை நீதிமன்றங்கள் இப்போது குறைந்தபட்ச சிறை தண்டனையை ஒன்றரை ஆண்டுகளாக உயர்த்தியுள்ளன. இது தவிர கோடிக்கணக்கில் தண்டமும் விதிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே பலமுறை நான் குறிப்பிட்டதைப் போல இது தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஒழிக்கும் நடவடிக்கை தான். இதற்கு உடனடியாக முடிவு கட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் தமிழக மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து வாழவே முடியாத நிலை உருவாகும்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியது. அதனால் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள்ளும் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளும் நுழைவதை தவிர்க்க முடியாது. அதனால் தமிழக மீனவர்களும், இலங்கை மீனவர்களும் காலம் காலமாக எந்தெந்த பகுதிகளில் மீன்பிடித்து வந்தார்களோ, அதே பகுதியில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிப்பது தான் சரியானதாகும். பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பகுதிகளில் மீன் பிடித்ததற்காக தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதையும், சிறையில் அடைப்பதையும் இந்திய அரசு வேடிக்கைப் பார்க்கக் கூடாது.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி அபராதம் விதிக்கப்பட்டும், சிறை தண்டனை விதிக்கப்பட்டும் இலங்கை சிறைகளில் வாடும் தமிழ்நாட்டு மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி, தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், தமிழக அரசு, இலங்கை அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களுக்கு ஏற்பாடு செய்து, அதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருப்பதி பிரம்மோற்சவம் தொடக்கம்: சந்திரபாபு பட்டு வஸ்திரம் காணிக்கை



புகழ்பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோயில் வருடாந்திர நவராத்திரி பிரம்மோற்சவ விழா, நேற்று மாலை கொடியேற்றத்துடன் கோலா கலமாக தொடங்கியது.

உற்சவ மூர்த்திகளான ஸ்ரீதேவி, பூதேவி, சமேதராய் மலையப்பர், விஸ்வக்சேனர் ஆகியோர் நேற்று மாலை தங்க கொடிமரம் வரை கொண்டு வரப்பட்டனர். அப்போது மேள தாளங்கள் முழங்க, வேத பண்டிதர்கள் வேதங்கள் ஓத, கருடன் சின்னம் பொறித்த கொடி, கொடி மரத்தில் ஏற்றப்பட்டது.

இதில் ஜீயர்கள், அர்ச்சகர்கள், தேவஸ்தான அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த நிலையில் நேற்று மாலை திருமலைக்கு வந்த ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை, இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் ஆனம் ராம்நாராயண ரெட்டி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அதன் பின்னர், இரவு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தம்பதி சமேதராக ஆந்திர அரசு தரப்பில் பட்டு வஸ்திரத்தை தலையின்மீது சுமந்து வந்தபடி கோயில் அர்ச்சகர்களிடம் சமர்ப்பித்தார்.

பின்னர், அவர் ஏழுமலையானை தரிசனம் செய்தார். தேவஸ்தான அதிகாரிகள் சியாமள ராவ், வெங்கைய்ய சவுத்ரி ஆகியோர் அவருக்கு தரிசன ஏற்பாடுகளை செய்தனர். பின்னர்,





# இஸ்ரேலின் வட பகுதியில் அபாய ஒலி எழுப்பப்பட்டது

இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை அடுத்து அங்கு அபாய சமிஞ்சை ஒலி எழுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், லெபனானிலிருந்து இன்று காலை ஐந்துக்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன என இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றிரவு மாத்திரம் 222 ஏவுகணைகள் லெபனானிலிருந்து ஏவப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஹமாசின் ஆயுதப்படையின் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், பாலஸ்தீனிய ஏதிலிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# 250 ஹெஸ்புல்லா உறுப்பினர்கள் கொலை; இஸ்ரேலியப் பாதுகாப்பு தரப்பு அறிக்கை

லெபனானில் கடந்த நான்கு நாள்களில் மாத்திரம் 250 ஹெஸ்புல்லா உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேலியப் பாதுகாப்பு தரப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் 21 பேர் விசேட இராணுவத் தளபதி தரத்தைக் கொண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நிலைகள் தாக்கப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனான் பிரதேசத்திலேயே இராணுவ நடவடிக்கைகள் அதிக அளவில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு லெபனானில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஹெஸ்புல்லாவின் அடுத்த தலைவர் எனக் கருதப்படும் ஹஷெம் சபிட்டைன் குறிவைக்கப்பட்டார் எனவும் அமெரிக்க ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எனினும் அவரின் நிலை குறித்தோ அல்லது மேலதிக விவரங்களோ உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, லெபனானிலிருந்து சிரியாவிற்குச் செல்லும் நெடுஞ்சாலை ஒன்று நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அந்த பகுதியில் இருந்த ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட இந்த நெடுஞ்சாலையின் ஊடாகவே ஆயுதங்கள் கடத்தப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



பக்கங்கள் 02

கனடா முரசு

சனிக்கிழமை 05/10/2024

## கனடிய பிரதமர் பிரான்ஸ் விஜயம்

கனடிய பிரதமர் பிரான்ஸிக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பிரான்கோபொயின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் இவ்வாறு பிரான்

02



# கனடாவில் வௌவாலால் பரவிவரும் வைரஸ் தொற்றால் சிறுமி உயிரிழப்பு

**கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வெளவால் ஒன்றின் மூலம் பரவிய வைரஸ் தொற்றினால் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.**

**ஒன்றாரியோ சுகாதார அதிகாரிகள் இந்த விடயத்தை உறுதி செய்துள்ளனர்.**

**வடக்கு ஒன்றாரியோ பகுதியில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. வைத்தியர் மெல்காம் லாக் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.**

வீட்டின் அறையில் வெளவால் ஒன்று இருந்ததாகவும் அந்த வெளவால் சிறுமியை கடிக்கவில்லை எனவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறு எனினும் துரதிஷ்டவசமாக வெளவாலின் மூலம் பரவிய வைரஸ் ஒன்றின் தாக்கம் காரணமாக அந்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

வெளவால்கள் மத்தியில் இந்த ராபீஸ் நோய் தொற்று பரவி வருவதாகவும் இது மனிதர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1924 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் கனடாவில் ராபிஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 30 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் அரிதாகவே இவ்வாறு நோய்த்தொற்று பரவும் என தெரிவிக்கப்படுகிறது. காட்டு விலங்குகளை தொடக் கூடாது எனவும் நாய்கள், பூனைகள் போன்ற வீட்டில் வளர்க்கப்படும் செல் லப்பிராணிகளுக்கு உரிய நேரத்தில் ராபிஸ் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




## 13 வயது சிறுவன் மீது கொலைக் குற்றச்சாட்டு

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் 13 வயதான சிறுவன் ஒருவன் மீது கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி சிறுவன் நபர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

54 வயதான நபர் ஒருவரை இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த மாதம் 1ஆம் திகதி இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்கு மற்றும் ஜெயின் வீதிகளுக்கு இடையில் இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கத்தி குத்துக்கு இலக்கான நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

என்ன காரணத்திற்காக இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.








# பொலிஸ் உத்தியோகத்தர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கைது

கனடாவில் பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 21 வயதானவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இருந்தார்.

மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 21 வயதான நபருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கொள்ளை சம்பவம் ஒன்று தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டிருந்த போது குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது. 21 வயதான டிபோர் ஓர்கொனா என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.




# அல்பர்ட்டாவில் கடைகளில் மதுபானம் விற்கத் தடை

கனடாவின் அல்பர்ட்டாவில் கடைகளில் மதுபானம் விற்பதற்கு அனுமதி வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஒன்றாரியோ மாகாணத்தில் கடைகளில் மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு அல்பர்ட்டாவில், கடைகள், பலசரக்கு கடைகள் போன்றவற்றில் மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தின் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக்கு அமைய இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

மதுபான வகைகளை கடைகளில் விற்பனை செய்வது மூலம் வாடிக்கையாளர்களுக்கு நன்மை ஏற்பட்டாலும் மதுபான சில்லறை விற்பனையை நிறுவனங்கள் பெருமளவில் இதில் பாதிக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



எனவே சிறு வியாபாரங்களை பாதுகாக்கும் நோக்கில் பலசரக்கு கடைகளில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதனை தடை செய்வதாக அல்பர்ட்டா மாகாண நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## கனடியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸிற்கு விஜயம் செய்துள்ளார்.

இன்றைய தினம் நடைபெற உள்ள மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொடர்பில் அவர் உரையாற்றுவார் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் காலகட்டத்தில் பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் எதிர் நோக்கும் சவால்கள் குறித்து அவர் இந்த மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளின் கூட்டணி இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் உலகத் தலைவர்களை வரவேற்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்ற நிலைக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த மாநாட்டிற்கு கனடிய வெளிவகார அமைச்சர் மெலனி ஜோலியும் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது .

